செ.வெ.எண்:18 நாள்:11.09.2020

# கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான குழந்தைகளுக்கு தேசிய குடற்புழு நீக்க வாரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.09.2020) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பாக குழந்தைகளுக்கு குடற்புழு நீக்கும் திட்டத்தின் கீழ் தேசிய குடற்புழு நீக்கும் தினம் நமது மாவட்டத்தில் எதிர் வரும் 14.09.2020 முதல் 26.09.2020 முடிய நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் ஒரு வயது முதல் 19 வயது வரை உள்ள சுமார் 5,20,012 குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட உள்ளது. இம்முகாமானது இரண்டு சுற்றுகளாக நடைப்பெற உள்ளது. முதல் சுற்று 14.09.2020 முதல் 19.09.2020 வரையிலும் இரண்டாம் சுற்று 21.09.2020 முதல் 26.09.2020 வரை திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் நடைப்பெற உள்ளது. இதில் வழங்கப்படாத குழந்தைகளுக்கு 28.09.2020 அன்று வழங்கப்படும்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:

குடற்புழு தொற்றினால் ஊட்டச்சத்து குறைப்பாடு சோர்வு மற்றும் சுகவீனம் படிப்பில் கவனமின்மை, பசியின்மை, இரத்தசோகை, குமட்டல், வாந்தி ஆகியவை குழந்தைகளுக்கு ஏற்படுவதை தடுக்க 1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அல்பெண்டசால் அரை மாத்திரையினை 200 Mg சுகாதாரத்துறை சார்ந்த கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு உட்கொள்ள தகுந்த அறிவுரையினை வழங்க வேண்டும்.

குழந்தைகளுக்கு மாத்திரையினை கொடுத்து நன்றாக சப்பி மென்று சாப்பிடுவதற்கு அறிவுறுத்தினார். ஒரு மாத்திரை 400Mg 2 வயதுக்கு மேல் 19 வயது வரை உட்கொள்வது மிகவும் அவசியம். எவ்விதமான பக்க விளைவுகளும் ஏற்படாது.

இம்முகாமானது காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நடத்த வேண்டும். இம்முகாமில் பங்கேற்கும் துறைகள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல்வாழ்வுத்துறை, பள்ளிக்கல்வித்துறை மற்றும் ஒருங்கினைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் (PO ICDS). இம்மாத்திரைகள் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் மற்றும் அங்கன்வாடி மையங்களிலும் மேற்கண்ட திட்டமிட்ட அட்டவணைப்படி இம்முகாமானது நடத்த வேண்டும்.

இம்மாவட்டத்தில் உள்ள பள்ளியில் பணிபுரியும் ஆசிரிய பெருமக்கள் அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மாத்திரைகளை உட்கொள்ளும்படி விழிப்புனர்வை ஏற்படுத்தி மாத்திரைகளை வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் துணை ஆட்சியர்(பயிற்சி) திருமதி.அபிநயா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ரகுகுமார், அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.ஆர்.முத்துச்செல்வன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பரமசிவம், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.கோவிந்தன், மாவட்ட ஆட்சியரின் அலுவலக மேலாளர் திரு.ஜெயசங்கர், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பாலசுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திருமதி ஆர்.சந்திரா, பள்ளிக்கல்வித்துறை மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் மற்றும் அரசுதுறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கிருஷ்ணகிரி.**